Registered as a News Paper in Sri Lanka　பக்கங்கள் 04　விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　மக்கள் தினசரி　Peoples Daily

நாதம் 01　மார்கழி　(13 - 12 - 1990)　வியாழக்கிழமை　ஓசை 288

## போக்குவரத்து வசதிக்கும் படையின் அனுமதி வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையின் ஊழியர்களுக்கானபோக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் வைத்தியசாலை நிர்வாகம் சுகாதார அமைச்சின் ஊடாக கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்திடம் அனுமதி பெறவேண்டும். தற்போதைய போக்குவரத்து வசதிகள் அற்ற நிலையில் வைத்தியசாலை நிர்வாகம மட்டுப்படுத்தப்பட்ட (4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில்

# தமிழரின் படுகொலைக்களமாக 'பிளான்டின் பொயின்ட்' முகாம்

### ஒரு இராணுவம காலை இழந்தது

(மட்டக்களப்பு)

ஆரையம்பதி இராணுவ முகாமில் இருந்து மண்முனைக்கு சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த திங்களன்று ரோந்து சென்றபோது விடுதலைப்புலிகள் புதைத்துவைத்த மிதிவெடி வெடித்ததில் இராணுவத்தில் ஒருவர் தமது கால் ஒன்றை இழந்தார். (மு)

## தப்பி வந்தவர் தரும் அதிர்ச்சியான தகவல்கள்

(திருமலை)

திருமலையில் உள்ள 'பிளான்டின் பொயின்ட்' இராணுவமுகாம் தமிழர்களின் படுகொலைக் களமாகவும், பயங்கர சித்திரவதைக் கூடமாகவும் மாற்றப்பட்டுள்ளதாக அங்கிருந்து தப்பி வந்த ஒருவர் தெரிவித்தார்.

இவர் தெரிவித்த தகவலின் படி திருமலை மாவட்டத்தில் கைது செய்யப்படும் தமிழர்கள் அனைவரும் 'பிளான்டின் பொயின்ட்' இராணுவ முகாமிற்கே கொண்டு செல்லப்படுகின்றனர் என்றும் தெரியவருகின்றது.

இம்முகாம் இராணுவத்தினரின் சித்திரவதைக் கூடமாகவும், படுகொலைக்களமாகவும் திகழ்கின்றது. இங்கு கொண்டுவரப்படும் தமிழர்களில் அனேகர் சித்திரவதை

கடல் கொந்தளிப்பால்

யின்போதே இறக்கின்றனர் அல்லது பின்னர் பல்வேறுவழி முறைகளில் கொல்லப்படுகின்றனர்.

'பிளான்டின் பொயின்ட்' முகாமில் கைதிகளாகவுள்ள தமிழர்கள் அனைவரும் நிர்வாணமாக்கப்பட்டு கண்கள் கட்டப்பட்டு கைகள் சங்கிலி (4 ஆம் பக்கம் பார்க்க)

## களுவாஞ்சிக்குடியில் புலிகள் இராணுவம், ரெலோ மீது தாக்குதல்

### அதிகாரி பலி; இரு படையினர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகனம் ஒன்றில்சென்றுகொண்டிருந்த ரெலோ இயக்கத்தினர் மீதும், சிறிலங்கா இராணுவத்தினர் மீதும் விடுதலைப்புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடந்ததிங்களன்று பிற்பகல் 2-50 மணியளவில் நீலாவணையில் இருந்து களுவாஞ்சிக்குடிக்கு வாகனமொன்றில் சென்றுகொண்டிருந்த ரெலோ இயக்கத்தினர் மீதும், சிறிலங்கா இராணுவத்தினர் மீதும் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ரெலோ, இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டது.

அதேவேளை களுவாஞ்சிக்குடியில் இராணுவத்தினர் மீது (4 ஆம் பக்கம் பார்க்க)

### இரு பெண்கள் மானபங்கம்

(மட்டக்களப்பு)

கடந்த திங்களன்று ஆரையம்பதி இராணுவ முகாமில் இருந்து காங்கேயன் ஓடை

## ஆரையம்பதியில் இராணுவ

## கப்பலிலிருந்து பொருள்கள் இறக்குவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் பருத்தித்துறை இறங்குதுறைக்கு நேற்றுச் சென்று கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படும் நிலைமையை அவதானித்துத் திரும்பினார்.

அவர் தமது விஜயம் பற்றி குறிப்பிடுகையில் பருத்தித் (4 ஆம் பக்கம் பார்க்க)

## யு. எஸ். எயிட்டின் முயற்சிக்கு படை தலைமையகம் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான விவசாய இடுபொருள்கள் மற்றும் விதை பொருள்களை 'யு. எஸ். எயிட்' ஸ்தாபனம் கப்பல் மூலம் இங்கு எடுத்துவர மேற்கொண்ட முயற்சியை கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் தடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் விவ (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு இராணுவம காலை இழந்தது

(மட்டக்களப்பு)

ஆரையம்பதி இராணுவ முகாமில் இருந்து மண்முனைக்கு சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த திங்களன்று ரோந்து சென்றபோது விடுதலைப்புலிகள் புதைத்துவைத்த மிதிவெடி வெடித்ததில் இராணுவத்தில் ஒருவர் தமது கால் ஒன்றை இழந்தார். (மு)

## தப்பி வந்தவர் தரும் அதிர்ச்சியான தகவல்கள்

(திருமலை)

திருமலையில் உள்ள 'பிளான்டின் பொயின்ட்' இராணுவமுகாம் தமிழர்களின் படுகொலைக் களமாகவும், பயங்கர சித்திரவதைக் கூடமாகவும் மாற்றப்பட்டுள்ளதாக அங்கிருந்து தப்பி வந்த ஒருவர் தெரிவித்தார்.

இவர் தெரிவித்த தகவலின் படி திருமலை மாவட்டத்தில் கைது செய்யப்படும் தமிழர்கள் அனைவரும் 'பிளான்டின் பொயின்ட்' இராணுவ முகாமிற்கே கொண்டு செல்லப்படுகின்றனர் என்றும் தெரியவருகின்றது.

இம்முகாம் இராணுவத்தினரின் சித்திரவதைக் கூடமாகவும், படுகொலைக்களமாகவும் திகழ்கின்றது. இங்கு கொண்டுவரப்படும் தமிழர்களில் அனேகர் சித்திரவதையின்போதே இறக்கின்றனர் அல்லது பின்னர் பல்வேறுவழிமுறைகளில் கொல்லப்படுகின்றனர்.

'பிளான்டின் பொயின்ட்' முகாமில் கைதிகளாகவுள்ள தமிழர்கள் அனைவரும் நிர்வாணமாக்கப்பட்டு கண்கள் கட்டப்பட்டு கைகள் சங்கிலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## களுவாஞ்சிக்குடியில் புலிகள் இராணுவம், ரெலோ மீது தாக்குதல்

### அதிகாரி பலி; இரு படையினர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகனம் ஒன்றில்சென்று கொண்டிருந்த ரெலோ இயக்கத்தினர் மீதும், சிறிலங்கா இராணுவத்தினர் மீதும் விடுதலைப்புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடந்ததிங்களன்று பிற்பகல் 2-50 மணியளவில் நீலாவணையில் இருந்து களுவாஞ்சிக்குடிக்கு வாகனமொன்றில் சென்றுகொண்டிருந்த ரெலோ இயக்கத்தினர் மீதும், சிறிலங்கா இராணுவத்தினர் மீதும் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ரெலோ, இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டது.

அதேவேளை களுவாஞ்சிக்குடியில் இராணுவத்தினர் மீது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இரு பெண்கள் மானபங்கம்

(மட்டக்களப்பு)

கடந்த திங்களன்று ஆரையம்பதி இராணுவ முகாமில் இருந்து காங்கேயன் ஓடையூடாக வம்மியடிமுனைக்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதியில் இரண்டு தமிழ்ப்பெண்களைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளனர். (மு)

## ஆரையம்பதியில் இராணுவ காவல் அரண்மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

ஆரையம்பதி நாலாம் கட்டையில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரணுக்குக் கடந்த திங்களன்று காலை 7.30 மணியளவில் விடுதலைப்புலிகளால் அருள் 89 தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இதேநேரம் தாழங்குடாவில் இருந்து ஆரையம்பதிக்கு வானொன்றில் வந்து கொண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடல் கொந்தளிப்பால் கப்பலிலிருந்து பொருள்கள் இறக்குவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் பருத்தித்துறை இறங்குதுறைக்கு நேற்றுச் சென்று கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படும் நிலைமையை அவதானித்துத் திரும்பினார்.

அவர் தமது விஜயம் பற்றி குறிப்பிடுகையில் பருத்தித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யு. எஸ். எயிட்டின் முயற்சிக்கு படை தலைமையகம் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான விவசாய இடுபொருள்கள் மற்றும் விதை பொருள்களை 'யு. எஸ். எயிட்' ஸ்தாபனம் கப்பல் மூலம் இங்கு எடுத்துவர மேற்கொண்ட முயற்சியை கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் தடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் விவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மார்புநோய் சிகிச்சை நிலையத்திற்கு தேவைக்கேற்ற மருந்துகளை அமைச்சு அனுப்புவதாகஇல்லை

(கோப்பாய்)

கோப்பாயில் இயங்கும் அரசாங்க மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் மார்புநோய் சிகிச்சைக்குரிய பல முக்கிய மருந்துப்பொருள்கள் முடிவடைந்தும், பற்றாக்குறையாகவும் உள்ளது.

இந்த சிகிச்சைக்காக பயன்படுத்தும் ரிபம்பசின், ஐ.என்.ஏ.எச். போன்ற மருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுவன்புலத்தில் ஷெல் தாக்கி இருவயோதிபர்கள் காயம்

(தெல்லிப்பளை)

பலாலி சிறிலங்கா இராணுவமுகாமிலிருந்து நேற்றுக்காலை 11.30 மணியளவில் கட்டுவன் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புகளை நோக்கி ஏவப்பட்ட 3 ஷெல்களில் கட்டுவன்புலம் மகாவித்தியாலயத்திற்கு அருகில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் வெளியில் நீர் அள்ளிக் கொண்டு நின்ற இ. அண்ணாமலை (வயது 50) சி. சிவசுப்பிரமணியம் (வயது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் மோதல்; இருபடை பலி; ஆயுதங்கள் மீட்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் முகாமைவிட்டு வெளியே வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் அவர்களிடம் இருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்றையதினம் காலைஏழு மணியளவில் ஊர்காவற்றுறை இராணுவமுகாமிலிருந்து இருநூறுபேர் வெளியே வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்குதல்மேற்கொண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீமன்காமத்தில் படையினர் மீது அருள் 89 தாக்குதல்

(மாவிட்டபுரம்)

வீமன்காமத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் அருள் 89 தாக்குதல் மேற்கொண்டதில் பலர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 11.30 மணிக்கு வீமன்காமத்தில் முட்கம்பி அடைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுத

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தவறி வீழ்ந்த வெடி பொருளினால் சிறுவனும், இளைஞரும் பலி

(மண்டைதீவு)

புதுமையான ஒரு பொருள் கடற்கரையில் கிடந்ததைக் கண்ட சிறுவன் அதை எடுத்துச்சென்று வீதியில்நின்றவர்களிடம்காட்டி ஆராய்ந்தபோது தவறி வீழ்ந்து பெரும் வெடியாக வெடித்ததனால் சிறுவனும், ஆராய்ந்தவரும்பலியாயினர். மேலும் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

மண்டைதீவு கடற்கரையில் கோட்டை இராணுவ தாக்குதல்களின்போது இராணுவத்தால் கைவிட்டுச்சென்ற ஒரு புதுமையான பொருளைக் கண்ட ரா. ஜலேந்திரன் என்ற (12வயது) சிறுவன் அந்த பொருளை கையிலெடுத்து விளையாடியவாறு வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை திருத்திக்கொண்டு நின்ற எஸ். சிவகுமார், சுந்தரகுமார் என்ற சகோதரர்களிடம் காட்டினார். அந்தப் பொருளை மூத்தவர் சிவகுமார் கையில் வாங்கி ஆராயமுற்பட்டசமயம் அது தவறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கம்

### லெப். கரிகரன்

நேற்று முன்தினம் இரவு பன்னிரெண்டு மணிக்கு எதிர்பாராத வெடிவிபத்து ஒன்றில் லெப். கரிகரன் (கார்த்திகேசு புலேந்திரன் கெருடாவில் வடக்கு. சாவகச்சேரி) என்பவர் வீர மரணமடைந்துள்ளார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்

## வரி விளம்பரம்

### ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்:- எமது ஸ்தாபனம் இல. 44, 46, கஸ்தூரியார் வீதியில்மீண்டும் 1-12-90முதல் இயங்கி வருகின்றது தவிர, இல.12, பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையிலும் தொடர்ந்தும் இயங்கிவரும் என்பதையும் எமது வாடிக்கையாளருக்கும், சகல மணிக்கூடு பாவனையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம் (50 வருடகால நம்பிக்கைச் சின்னம் ரதிவோச் வேக்ஸ்) - நிர்வாகம்.

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256A பருத்தித்துறை வீதி, நல்லூர். ''அரஸ்ஜவுளியகம்'' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் R/888)

### லைடன் ரெக்ஸ்ரையில்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன் புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம் (B1656)

### சைவ உணவு

நியூ குகானந்த பவான் (சைவ உணவு) சிறந்த முறையில் உடன் ஓடர்கள் செய்து கொடுக்கப்படும். இல. 879, கே. கே எஸ். வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (B/ 1710)

### அன்ரன் ஆர்ட்ஸ் ANTAN ARTS

தொழில் ஸ்தாபனங்களுக்கான விளம்பரப் பெயர்ப்பலகைகள் குறித்த தவணையில், சிறந்த முறையில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்க. அன்ரன் ஆர்ட்ஸ், C/O டில்கா வாச் வேக்ஸ், டில்கா மேல் மாடி, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். (B/1684)

### தவறிவிட்டது

இல 60, கடை வீதி, வவுனியாவைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகேஸ்வரன் என்பவருடைய அடையாள அட்டையும், 9 படம் எடுத்தபடியுள்ள படச்சுருள் (திருமணம்), காசோலை என்பன சங்குப்பிட்டிக்கும் பூநகரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 107, பலாலி றோட், கந்தர்மடம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (R 918)

### The Jaffna Education Centre யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O/L, A/L Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியும் உண்டு. (B-1657)

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட காட் வகைகள் அனைத்தும் விற்பனையாகிக்கொண்டு இருக்கின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் உங்கள் தெரிவுக்கு முந்துங்கள் அனைத்தும் புதிய டிசைன்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். நல்லூர், யாழ்ப்பாணம். (B-1718)

## DIPLOMA in NURSING

புதிய பிரிவுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன

✻ துரித பயிற்சி நெறி ✻ செய்முறைப் பயிற்சியுடன் கூடியது

✻ பிரபல விரிவுரையாளர் குழு

விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, ST. PETER'S LANE, HOSPITAL ROAD, JAFFNA.

(B.1693)

### சங்கம் அமைக்க ஏற்பாடு

(கோப்பாய்)

வலி. வடக்கில் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்கள் கடந்த ஆனிமாதத்தின் பின் ஓய்வூதியம் பெற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்தக் குறையை நிவர்த்திசெய்ய ஓய்வூதியம் பெறுவோர் ஒருசங்கம் அமைத்துச் செயற்படவுள்ளார்கள். சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. வலி வடக்கு உப அரசாங்க அதிபர் பிரிவில்ஒய்வூதியம்பெறுவோர் அனைவரும் மேற்படி கூட்டத்துக்குச் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி இராசதுரை செல்வரத்தினம்

மலர்வு: 22-12-1936 உதிர்வு: 13-11-1990

அன்பாக எமை வளர்த்து
ஆளாக்கி அவனியிலோர்,
பண்பான வாழ்வெமக்குத் தந்துவிட்டு,
புண்ணாக இதயங்களைக் கதறவிட்டு,
ஏனம்மா விண்ணோக்கி
விரைவாகப் பறந்து சென்றீர்கள்?

உம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
தாய், பிள்ளைகள், மருமகன்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள், மச்சான்மார்,
உற்றார், உறவினர், பெறாமக்கள்

கட்டுவன் தெற்கு,
நாச்சிமார் கோவிலடி,
தெல்லிப்பழை.

(B. 1694)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாணம் பெரும்பாகம்

1991ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1990ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி (20-12-1990) மு. ப. 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.


மேலதிக விபரங்கள் தெரிய விரும்புவோர் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர் ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்திய
பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

சு.சே.பி. பணிமனை,
யாழ்ப்பாணம்.
10-12-1990.

(B-1704)

## நினைவஞ்சலி



க. இந்திரவேல்
(இந்திரன்)
வீரஜனனம்: 25-11-1972
வீரமரணம்: 10-10-1990



க. சுரேந்திரன்
(கப்டன் அன்சார்)
வீரஜனனம் 29-10-1967
வீரமரணம்: 16-6-1990



க. ரவீந்திரன் (ரவி)
தாயின் மடியில் 24-4-1970
அரக்கர் அழிப்பு 26-7-1989

அளவெட்டி வடக்கு, அளவெட்டி முதலியார் கோயிலடியைச் சேர்ந்த இ. தேவராசா என்பவரின் இல்லத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். தனிப்பட்ட அழைப்பு இல்லை என்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றோம்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

இங்ஙனம்
தந்தை, தாய்,
அக்கா, அண்ணா, தங்கைமார்.

(B/1699)

## சிந்தனைக்கு

வர்த்தக ரீதியான வெற்றியையோ
அதிகார பூர்வமான செல்வாக்கையோ நாடி,
பொதுமக்களைத் திருப்தி செய்ய முயல்பவன்
மட்டுமே நம் மதிப்புக்கு அருகதை அற்றவன்.

— ஜேக்மாரித்தோன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 13-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# காலத்தின் நிகழ்வுகள் - எம் கலைகளில் வெளிப்படட்டும்

விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பிரிவினரின் 'வேங்கைகளின் விடுதலை வேதங்கள்' ஒலிப்பதிவு நாடா அறிமுகவிழா அண்மையில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. அந்த நாடாவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ள பாடல்கள் இன்று மக்கள் பலரின் வாய்களில் முணுமுணுக்கப்படுவதால் எதிர்பார்த்த வெற்றியை அந்த நாடா பெற்றுள்ளது என்றே கூற வேண்டும்.

அதேவேளை இந்த ஒலிப்பதிவு நாடாவானது பெரும் சிரமத்தின் மத்தியில், மிகக் குறைந்த வசதிகளுடன் ஒலிப்பதிவு செய்யப்பட்டதாக அறிமுக விழாவில் தெரிவிக்கப்பட்டது இந்த நிலையில் அந்த ஒலிப்பதிவு சம்பந்தமான விடயத்தில் அதில் பங்கு கொண்ட கலைஞர்களின் திறமையே அதன் வெற்றிக்குக் காரணம் என்று சொல்லலாம். ஆகையினால் எமது மண்ணில் திறமை மிக்க படைப்பாளிகளும் கலைஞர்களும் உள்ளனர் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.

ஆனால் அந்த அறிமுகவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய பலரும் யதார்த்த கலைப்படைப்புக்களை உருவாக்க படைப்பாளிகளும் கலைஞர்களும் முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். அந்த வேண்டுகோளானது எமது சமூகத்தில் இருக்கும் பெரும் எண்ணிக்கையானபடைப்பாளிகள், கலைஞர்கள் யதார்த்தக் கலைப் படைப்புக்களை உருவாக்க முன்வரவில்லை என்பதையே காட்டியது.

ஒரு நாட்டின் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே உலகில் சிறந்த இலக்கியங்களும் கலைப் படைப்புக்களும், புதிய கலைப்படைப்பு வடிவங்களும் உருவாகியுள்ளதாக வரலாறு சொல்கின்றது. இதை உறுதிப்படுத்துவது போன்றே ரஷ்யப் புரட்சிக் காலத்தில் மாக்ஸிம் கோர்க்கி போன்றோரும், இந்தியாவில் ரவீந்திரநாத்தாகூர், பாரதியார் போன்றோரும் இருந்துள்ளனர்.

அதேவேளை நெருக்கடியான சூழல், யுத்த சூழல் போன்ற காலத்திலேயே பெருமளவில் இலக்கிய கலைப் படைப்புக்கள் உருவாகியுள்ளன. ஏனெனில் நெருக்கடி காலத்தில் ஆக்கங்களுக்கான விடய தானங்கள் பெருமளவில் கிடைக்கின்றன.

அத்தோடு இந்தக் கலை ஆக்கங்கள் மக்களுக்கும் போராளிகளுக்கும் சிறந்தவழிகாட்டிகளாகவும், எழுச்சிக்கு வித்திடுபவையாகவும் இருந்தும் வந்துள்ளன.

உலக வரலாற்றுடன் ஒப்பிடும்போது எமது படைப்பாளிகள், கலைஞர்களிடம் இருந்து போதிய படைப்புக்கள் வெளிவரவில்லை என்றே கூறுதல் வேண்டும். ஆகையினால் நெருக்கடிக்கு முன்னர் படைப்புக்களில் ஈடுபட்டவர்கள் அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டுள்ளார்கள் என்றே கூறவேண்டியுள்ளது.

ஆகையினால், இந்தப் படைப்பாளிகள்பற்றி, இவர்கள் படைப்பாளிகள் தானா என்ற சந்தேகம் எழுகின்றது. சூழலுக்கேற்ப யதார்த்தத்திற்கு ஏற்ப எப்பொழுதும் படைப்புக்களை உருவாக்கிக் கொண்டு இருப்பவனே உண்மையான படைப்பாளியாவான். யதார்த்தத்தில் இருந்து ஒரு படைப்பாளி ஒதுங்கி இருக்க முடியாது.

இன்று படைப்புக்கள், ஆக்கங்களை வெளியிட முடியாத வசதி இன்மை இருப்பினும், இப்படைப்பாளிகளிடம் வீட்டில் தானும் படைப்புக்கள் உள்ளன என்றால் அதுவும் சந்தேகமாகவுள்ளது.

ஆக்கங்களை வலிந்து ஏற்படுத்த முடியாது என்பது எமக்குத் தெரியும். அதேவேளை யதார்த்தங்களின் மத்தியில் மனதில் ஆக்கங்கள் உருவாகாதவர்கள் படைப்பாளிகள் அல்ல என்பதிலும் சந்தேகமில்லை. பணத்திற்காக மட்டுமே ஆக்கங்களை உருவாக்குபவர்களை படைப்பாளிகளாக அங்கீகரிக்க முடியாது.

அதேவேளை, இந்த யுத்த சூழலில் பல புதிய படைப்பாளிகள் ஆங்காங்கு உருவாகி வருகின்றார்கள். அவர்கள் யதார்த்தங்களைப் படைப்பதினால், மக்கள் மத்தியில்செல்வாக்கையும் பெறுகின்றனர். இந்தநிலையில் பழையவர்கள் யதார்த்தமான படைப்புக்களைப் படைக்கத் தவறும் பட்சத்தில், மக்கள் மனங்களில் இருந்து ஒதுங்க வேண்டியே வரும்;

# மாவீரர் வாரம் ஒரு கண்ணோட்டம்

(நேற்றைய தொடர்ச்சி)

சிவப்பும், மஞ்சளுமாய் வீதிகள் எங்கும் கொடிகள் அசைந்தாடிக் கொண்டிருக்க -ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக வானொலி முழங்க - எங்கும் ஒரு வகை ஆர்வம் மிதக்க, நவம்பர் 21இன் அதிகாலை புலர்ந்தது. எமது நாட்டின் சுதந்திரம், பாதுகாப்பு என்பவற்றுடன் எமது மக்களின் கௌரவ வாழ்வு உறுதிப் படுத்தப்பட்டாக வேண்டும். அதற்காக நாம் - இன்றைய தலைமுறையாளர் போராடித்தான் ஆக வேண்டும் என்ற எண்ணம் பரவியிருந்ததை எடுத்துக்காட்டின நடந்தேறிய நிகழ்ச்சிகள்.

இதற்கு முன்பாக இப்படியொரு நிகழ்ச்சியைக் கண்டிராதவர்கள் - இன்றோ புத்தார்வம் மிக்கவர்களாக தத்தம் நிலையங்களை நோக்கி விரைந்தனர். காலை 9 00 மணிக்கு தமிழினத்தின் தேசியக்கொடியான சிவப்புப் பின்னணியில் மஞ்சள் நிறத்தில் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட கொடியினை ஏற்றிட ஆவல் கொண்டவராய் மக்கள் சென்றனர். கல்விச் சாலைகள், வாசிகசாலைகள், சனசமூக நிலையங்கள், பொது மக்கள்கூடும் மையங்கள் மற்றும் அரசாங்க தனியார் அலுவலகங்கள் யாவற்றிலும் இத்தேசியக் கொடி ஏற்றும் வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆதலினால் ஒவ்வொருவரும் தாம் கொடி ஏற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகப் புறப்பட்டமையால் வீதியெங்கும் ஒரே சனநடமாட்டமாகவே காட்சி தந்தது. அரசின் ஊரடங்கு உத்தரவு புதையுண்டுபோக அங்கிங்கெனாதபடி எங்கும் நடமாடிய மக்கள் ஒவ்வொருவரின் செயற்பாட்டின் நோக்கமும் ஏறத்தாழ மாவீரர் வாரத்தின் ஆரம்பநாள் நிகழ்ச்சிகளையே குறிப்பதாக இருந்தது என்றால் மிகையானதல்ல.

மன்னாரிலே பல இராணுவத்தினரைப் பலிகொண்டு, சிலரைக் கைதுசெய்த நிகழ்ச்சியில் களப்பலியான லெப். கேணல் விக்டர், யாழ்ப்பாணத்தை நோக்கி நகர எத்தனித்த இராணுவத்துடன் மோதிக் களப்பலியான லெப். கேணல் ராதா, தான் வாழ்ந்த காலத்தில் நேசித்த மக்களுக்காகவும் - மண்ணின் விடிவுக்காகவும் ஆயுத மேந்த முடியாத இக்கட்டான வேளையில் நீர்தானும் அருந்தாது சாகும்வரை உண்ணா நோன்பு இருந்து மெல்ல மெல்லச் சாவை அணைத்துக் கொண்ட திலீபன், கொண்ட கொள்கைக்காக நஞ்சை அருந்தி மரணித்த லெப். கேணல் குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட பன்னிருவர் என்றவாறாக நீடித்த சுமார் இரண்டாயிரத்து ஐநூறு வீர வேங்கைகளின் நினைவுகளில் எமது தேசம் மூழ்கித் திளைத்தது.

மாவீரர்களின் பெயராலே வீதிகள் புதுப்பொலிவுபெற்று புதுப்பெயர் பெற்றன. ஒவ்வொரு ஊர்களிலும் - அந்தந்த ஊரைச் சார்ந்த அல்லது அந்தப் பகுதியில் இயக்கப் பணியாற்றி தியாக வேள்வியில் ஆகுதியான மாவீரர்களின் பெயர்கள் வீதிகளுக்கு சூட்டப்பட்டன. நெஞ்சில் விடுதலை நெருப்பையும், உணர்வுகளில் சுதந்திர தாகத்தையும் சுமந்து எமது மக்களுக்காக மடிந்த இந்த மண்ணின் புதல்வர்களை தமிழீழம் கௌரவிக்கின்றது என்பதன் சாட்சியங்களில் ஒன்றாக இது விளங்கியது. உயிர்களில் உன்னதமான அந்த உயிர்களை - மனிதர்களில் உன்னதமான அந்த மாவீரர்களை நாங்கள் பெரும் மதிப்புடன் வணக்கம் செய்கின்றோம் என்பதை எடுத்துக் காட்ட அலங்கரிக்கப்பட்ட மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மக்கள் மலர்கள் சொரிந்து அஞ்சலி செலுத்தினர்.

மேடையில் ஏறி நின்று தம் வாக்குச் சாதுரியத்தால் வாக்கு வேட்டையாடிச் செல்லும் மரபுகள் தான் கடந்த கால அரசியல் கூட்டங்கள். அடுக்கு மொழிகளை அள்ளி வீசி சாதுர்யம் மிகுந்த பேச்சுக்களால் உணர்ச்சி வசப்படுத்தி திரண்டிருக்கும் மக்கள் கூட்டத்திடமிருந்து பலத்த கைதட்டல்களை வாங்கிச் செல்வதே கடந்த காலத்தில் தலைவர்களின் மேடைப் பேச்சாக இருந்து வந்திருக்கிறது. காக்கிச்சட்டைப் பொலிஸாரின் குண்டாந்தடிக்கும், கண்ணீர்ப் புகைக்கும் அஞ்சிடும் பண்பு மண்டிக் கிடந்தது மக்களிடம். ஆனால் இன்றோ வட்டமிட்டுப் பறக்கும் விமானங்களுக்கும், தலைக்கு மேலே பாய்ந்து செல்லும் ஷெல்களுக்கும், தூரத்தே கேட்கும் துப்பாக்கி வேட்டுக்கும் அஞ்சாமல் மாவீரர் தினக் கூட்டங்களில் மக்கள் ஆர்வத்துடன் பங்கு பெறலாயினர். வெற்றுச் சவடால்களுக்கும், வெட்டிப் பேச்சுக்களுக்கும் இடமின்றி தமது சத்தியமான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் போராளிகளின் ஒவ்வொரு சொல்லுக்கும் உன்னிப்பாகச் செவி கொடுக்க பொதுக் கூட்டங்களுக்கு திரண்டனர் மக்கள். இப்பொதுக் கூட்டங்களில் இதுவரை நிகழ்த்தப்பட்ட சாதனைகள் வரலாறாகப் போதிக்கப்பட்டன. தற்பொழுது நடைபெறும் சம்பவங்களின் அடிப்படைத் தாற்பரியங்கள் விளக்கப்பட்டன; எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்பது எடுத்துச் சொல்லப்பட்டது: மரணித்த மாவீரர்கள் எண்ணத்திலிருந்த கனவுகள் பற்றியும், ஒருவராய்- இருவராய், பத்தாய் - பின்னர் பலராய் இயக்கம் வளர்ந்த கதை பற்றியும் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆல் போலத் தழைத்து அனைவருக்கும் நிழல் கொடுக்கும் அதேவேளை அறுகு போல் வேரோடி மண்ணின் மீதான பிடிப்பையும் இருப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ளும் பாதையில் அனுபவித்த சிரமங்கள் - பட்டகஷ்டங்கள் யாவும் பகிரப்பட்டன.

இவற்றிற்கு செவி கொடுத்தமையாலும் உண்மையாகவே போராட்டத்தின் தேவை பற்றியும் - இந்தப் போராட்டத்துக்குக் கிடைக்கும் வெற்றியிலேயே அனைவரதும் எதிர்காலமும் தங்கி நிற்கிறது என்பதைப் புரிந்து கொள்பவர்களாக - புத்துணர்ச்சி பெற்றவர்களாக தமது பங்களிப்பைச் செலுத்தும் அவாவினை பொதுக் கூட்டங்கள் மக்களுக்கு ஊட்டின. முந்தைய தலைமுறைகளின் தவறுகள் இனியும் தொடரப்படக் கூடாது என்பதை இன்றைய அப்பாக்களுக்கும், அம்மாக்களுக்கும் தமிழீழ மாவீரர்வாரத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் போதித்தது எனத் துணிந்து கூறலாம்.

பலாலியிலிருந்து காங்கேசன் துறை வரை தனது இருப்பை விஸ்தரித்துக் கொண்டதாகக் கருதிய இறுமாப்பில் இருந்த இராணுவத்தினருக்கு, கீரிமலை - மாவிட்டபுரம் வீதியில் தச்சன் காட்டுச்சந்தி என்னும் இடத்திலிருந்த காவலரண் மீது நடந்த தாக்குதல் நெற்றியடி போல அமைந்து விட்டது எனலாம். தமிழீழ மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளான 21 ஆம் திகதி காலை முதல் மோதலைத் தொடங்கிய இராணுவம் தன் அணியில் பத்துப்பேரை பலி கொடுத்ததுடன் ஒரு சலாடின் ட்றக் சிதைக்கப்பட்ட நிலையில் முகாமுக்குத் திரும்பிச் சென்றது.

இதுநிற்க. ஈழத்தமிழர்களின் போராட்ட வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தால் செல்வநாயகம் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 1977 க்குப் பின் நிகழ்ந்த பல்வேறு முக்கிய நிகழ்வுகளைப் புகைப்படங்களில் காண மக்கள் நீண்ட வரிசைகளில் மணிக்கணக்காகக் காத்திருந்தனர். மாவீரர்களின் தியாகங்கள் வரலாறுகளில் நிலைத்து நிற்பதனை இக் கண்காட்சி துல்லியமாக எடுத்துணர்த்தியது.

தமிழீழ மக்களின் பொருளாதார வளங்களின் பயன்பாடு, உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தல் என்பன உள்ளிட்ட பல தரப்பட்ட நோக்கங்களைக்கொண்டதாக தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் மாபெரும் கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. யாழ். இந்துவில் மாவீரர்வாரத்தினையொட்டி இடம்பெற்ற இக் கண்காட்சி பெரிதும் பயனுடைய பல கண்டுபிடிப்புகளை மக்களுக்கு அறிமுகம் செய்யும் களமாகப் பயன்பட்டது. உதாரணமாக இன்றைய இக்கட்டான பொருளாதார சூழலில் புதிய உணவுப் பண்டங்களின் நுகர்ச்சியை அறிமுகமாக்க வேண்டியிருக்கிறது. இதற்காக பனம் பாணியிலிருந்து தயாரிக்கப்பட்ட 'கற்பகா பாண்' இங்கு விற்பனைக்கும் அறிமுகத்திற்கும் விடப்பட்டது சிறப்பானதாகும்.

இவ்வாறாக எங்கும் மாவீரர் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கையில் புதிய உத்வேகத்தையூட்டும் செய்தி யொன்று மக்களின் செவிகளில் தேனாக இனித்தது. 22 ஆம் திகதியன்று தொடங்கிய கடும் மோதலையடுத்து 24ஆம் திகதியன்று மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளிடம் முற்றாக வீழ்ச்சி கண்டது என்பதே அது. நூற்றுக்கணக்கான படையினரைப் பலியாக்கி, பெருமளவு இராணுவத் தளபாடங்களை மீட்டெடுத்ததுடன், பலமான ஒரு நிலையில் இருந்த படையினரைப் பரிதாப நிலைக்கு உள்ளாக்கிய இந்தச் செயல் வரலாற்றின் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

அதுவும் மாவீரர் வாரத்தை ஒட்டி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறிக் கொண்டு மக்களை அச்சுறுத்தும் செய்திகளை வெளியிட்ட அரசு, தனது வானொலியிலேயே,'பயங்கரவாதிகளின்' தாக்குதலிலிருந்து மீட்டெடுத்த படையினரைப் பற்றிக் கூறித்திருப்திப்பட வேண்டியதாகிவிட்டது.

மாங்குளம் முகாம் தகர்க்கப்பட்டு,அதுபுலிகளால் கைப்பற்றப்பட்ட செய்தி கிடைத்த பின்னர் மக்களின் உற்சாகம் களைகட்டத் தொடங்கியது. 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் இடம்பெற்ற பொதுக் கூட்டங்களுக்குத் திரண்ட மக்களின் தொகையும், வெவ்வேறு நிகழ்ச்சிகளில் ஊக்கமுடன் மக்கள் செயற்பட்ட பாங்கும் இதனைத் துல்லியமாக உணர்த்திவிடத் தவறவில்லை.

இந்த நிலையில் தான் மாவீரர் வாரத்தின் இறுதிநாளான மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயிற்று.

(வளரும்)

# முன்னாள்ஜனாதிபதிஎர்ஷாத் பொலிசாரால் கைது

(டாக்கா)

பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று டாக்காவில் அவரது வீட்டிற்குள்ளிருந்து அவரைக் கைது செய்ததாகப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 4 ஆம் திகதி எர்ஷாத் ஜனாதிபதி பதவியில் இருந்து இராஜினாமாச் செய்ததை அடுத்து அவரைக் கைது செய்யும்படி டாக்காவில் ஆயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம்செய்துவந்தது தெரிந்ததே.

எர்ஷாத் தங்கக் கடத்தல்; நிர்வாக முறைகேடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள வங்கிகளில் தமது சொந்தக் கணக்குகளில் போடுவதற்கு அரசாங்கப் பணத்தைக் கையாடியது போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையிலான விசேட விசாரணை மன்றம் ஒன்று இவரை விசாரிக்கும் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளைமுன்னாள் உள்துறை அமைச்சர் மொஹமது ஹசனும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

## தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சிர்கேடு

# தி. மு. க. ஆட்சியும் மதவெறியாளருமே காரணம்

-நெடுமாறன்

(சென்னை)

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுள்ளமைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசின் செயலற்ற தன்மையும், தீவிர மதவெறி அமைப்புகளுமே காரணம் என்று தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் ப. நெடுமாறன் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாநில நிர்வாகத்தில் தி. மு. காவின் தலையீடு இருப்பதால் காவல்துறை முற்றிலும் செயலிழந்திருப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

## கூட்டுறவுச் சங்க கிளை திறப்பு

யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளையொன்று நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. நாளை பகல் 12.30 மணியளவில் இதன் திறப்பு விழா நடைபெறவுள்ளது.

## ஹைதராபாத்தில்

# உதவி பொலிஸ் கமிசனர் முஸ்லிம் பொலிஸால் கொலை

(ஹைதராபாத்)

இந்தியாவில் ஆந்திர மாநிலத்திலுள்ள ஹைதராபாத் நகரின் உதவி பொலிஸ் கமிஷனர் கே. சத்தியநாராயன் சக முஸ்லிம் பொலிஸ்காரர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். இதைத் தொடர்ந்து நகரில் மீண்டும் இந்து முஸ்லிம் கலவரச் சூழலும் பதற்றமும் ஏற்பட்டிருக்கிறது.

மதக் கலவரத்தை அடக்கும் வகையில் வீடு வீடாகச் சோதனை நடாத்திக் கொண்டு வரும்போது இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

## வடபகுதி அரச வங்கிகளுக்கு

# கம்பியூட்டர் புகுத்தும் திட்டம் அரசால் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடபகுதி அரச வங்கி சேவையில்கம்பியூட்டர் முறையை புகுத்தும் அரசின் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கம்பியூட்டர்களை இயக்கக் கூடிய ஊழியர்கள் இருந்தும் தொடர்ச்சியான மின் விநியோகம் இன்மை, இப்பகுதியில் நிலவும் சீரற்ற நிலைமை போன்றவற்றால் இத்திட்டம் கைவிடப் பட்டுள்ளது. இதனால் வடபகுதியில் வங்கி சேவையை துரித கதியில் வழங்க முடியாத நிலை இருந்து வருகிறது. (க)

## சோவியத்திற்கு இந்தியா கோதுமை கடன்

(டில்லி)

சோவியத் யூனியனில் நிலவும் கடும் உணவுப் பஞ்சத்தை சமாளிக்கும் பொருட்டு இந்தியா 10 லட்சம் தொன் கோதுமையைக் கடனாக வழங்க இருக்கின்றது. பல்வேறு நாடுகளிலிருந்தும் 1000தொன் உணவுப் பொருட்கள் ஏற்கனவே சோவியத் யூனியனுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றது.

## சமூகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியில் ஏற்கனவே தங்கள் காசோலைகளைச்சமர்ப்பித்து அனுமதிக்கப்பட்ட சகல திணைக்கள, கூட்டுத்தாபன மற்றும் உத்தியோகத்தர்களையும் இன்று காலை 9 00 மணிக்குப் பருத்தித்துறை இறங்குதுறையில் தவறாது சமுகம் தரும்படி இலங்கை பிரதான வங்கியின் முகாமையாளர்கேட்டுள்ளார்.


## லொறி எஞ்சின் தேவை

பெற்றோலில் இயங்கக் கூடிய லொறி எஞ்சின் தேவை. நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்பது கட்டாயம் அல்ல. எஞ்சின் தரத்திற்கு ஏற்ற பெறுமதி வழங்கப்படும். தொடர்பு:

விளம்பர இல. 103,

c/o ஈழநாதம்,

31, மகேந்திரா வீதி,

யாழ்ப்பாணம். (F/2)


# செய்தி தகவல் மையத்திற்கு நிருபர்கள் நியமனம்

(நமது நிருபர்)

கோப்பாய் செய்தி தகவல் மையத்திற்கு இராம சேவையாளர்பிரிவுகள் தோறும் நிருபர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

க. பொ. த.சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித் தகைமையும்,எழுத்து ஆற்றல் உள்ளவரும் விண்ணப்பிக்கலாம் என்றும், யாழ். மாவட்டத்தின் சகல இராம சேவையாளர் பிரிவுகளில் இருந்தும் ஒருவர் தெரிவு செய்யப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

செய்திகளுக்கான கொடுப்பனவுகள் செய்தி தகவல் மையத்தினாலேயேதீர்மானிக்கப்படும் என்றும், தற்போது கோப்பாயில் அமைத்துள்ள செய்தி தகவல் மையத்திற்கு (கோப்பாய்ச்சந்தி முன்னைய பிரதேச செயலகம்) விண்ணப்பதாரிகள் நேரில் வரும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

அனைத்து, அதாவது வடமராட்சி, தென்மராட்சி, வலிகிழக்கு, வலி வடக்கு, வலி தெற்கு தீவகம் அடங்கலாக உள்ள யாழ். மாவட்டத்தில் உள்ளோர்விண்ணப்பிக்கலாம்

---

போக்குவரத்து

போக்குவரத்து வசதிகளையே ஊழியர்களுக்கு செய்து வருகிறது. இந்த போக்குவரத்து சேவையை ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கவே கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்தின் அனுமதி பெற வேண்டி உள்ளது.

இதனாலேயே தற்போது வைத்தியசாலையில் ஊழியர்களின் வரவு திருப்தி கரமாக இல்லை என வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார். (க)

---

களுவாஞ்சிக்குடி

விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாக்குதலில்ஒரு அதிகாரி கொல்லப்பட்டதாகவும், இரு இராணுவத்தினர் படுகாயம் அடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாபபு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. (மு)

---

ஊர்காவற்றுறையில்

டனர். இத்தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ரி 81ரகதுப்பாக்கி1, மகசீன் 4, ரீ 56-2 ரகத்துப்பாக்கி-1, மகசீன்5, தொலைத் தொடர்புக்கருவி 1, ஐ. எம். ரவைகள் 210 ஆகியன விடுதலைப்புலிகளால் கைபபற்றப்பட்டன. (மு)

---

தவறி வீழ்ந்த

வீழ்ந்து பெரும் வெடியாய் வெடித்தது. இதனால் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற சிறுவன் ஸ்தலத்திலேயே சிதறி மரணமானான். சிவகுமாரும் உடல் சிதறிய நிலையில் அவசரமாக படகு மூலம் யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

வெளிநோயாளர்பிரிவு வாசலில் இவரின் உயிரும்பிரிந்தது. இவருடன் கூட நின்றுமோட்டார் சைக்கிள் திருத்திய சுந்தரகுமார்என்றஅவரின் சகோதரர் கைவிரல்கள் சிதறி முகத்தில் பலத்த காயமடைந்த நிலையில் போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85)

---

ஆரையம்பதி

டிருந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கு இடையில் வைத்து புலிகளால் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது, இச்சம்பவங்களால் இராணுவத் தரப்பில் பலத்த சேதம ஏற்பட்டது. சேதவிபரம் தெரியவில்லை. (மு)

---

வீமன்காமத்தில்

லைப்புலிகள் அருள் 89 தாக்குதலும், துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொண்டதில் அவ்விடத்தில் நின்ற இராணுவத்தினர் பலர் காயமடைந்துள்ளனர். (மு)

---

கட்டுவன் புலத்தில்

55) ஆகியோர் பலத்த காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அருகிலிருந்த சில வீடுகளும் இதனால் சேதமடைந்துள்ளன. (ச)

# இறைவரி ஊழியருக்கு ஐந்து மாதச் சம்பளமில்லை

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் யாழ். பிராந்தியப் பணிமனையில் கடமையாற்றும் ஊழியர்களுக்குக் கடந்த ஐந்து மாதங்களாக எவ்வித சம்பளக்கொடுப்பனவுகளும் இதுவரை தமக்கு வழங்கப்படவில்லையெனக் கவலை அடைந்துள்ளனர்.

ஐந்துமாதச்சம்பளக் கொடுப்பனவு கிடைக்காததையிட்டு பல தடவைகள் கொழும்பில் செயற்பட்டுவரும் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யுமாறு மேற்படி ஊழியர்கள் உயர் அதிகாரிகளைக் கேட்டும் இது வரையும் எதுவித பலனும் கிடைக்கவில்லைஎன அதிருப்தி தெரிவித்துள்ளனர். (24)

## நச்சு அருந்திய வயோதிபர்

நஞ்சுத் திரவகம் அருந்திய நிலையில் நேற்று மாலை யாழ். போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் க. பஞ்சலிங்கம் என்ற 64 வயது நபர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடுமையான குடிபோதையில் இத் திரவத்தை அருந்திவிட்டதாக அவருடைய மனைவியார் கூறினார். (85)

---

கப்பலில்

துறை இறங்கு துறையில் பொருள்களை இறக்கும் வேலை தொடர்ந்து தாமதமடைவது குறித்து அதனை நேரில் சென்று அவதானித்ததாகவும், கடலில் நேற்று மதியம்வரை கடல் கொந்தளிப்பு இருந்தமையினால் மதியம் வரை பொருள்கள் இறக்கப்படும் வேலை ஆரம்பிககப்படவில்லை என கூறியதுடன்,

இறங்குதுறையிலிருந்த ஒரு சில அதிகாரிகள் தமக்குக் கூறிய தகவலின்படி தபால் பொதிகளையும், மருந்துப் பொதிகளையும் முதலில் இறக்குவதற்கான நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் கூறினார். (லோ

---

தமிழரின்

யால் பிணைக்கப்பட்டு இருட்டு அறைகளில் அடைக்கபபட்டுள்ளனர்.

இவ்வாறு கைதிகளாகவுள்ளவர்களுக்கு ஒரு நாளுக்கு ஒருமுறைகைப்பிடியளவுஉணவு மட்டுமே வழங்கப்படுகின்றதாகவும், அவ்வுணவை உண்ணும்போதும் அவர்கள் தாக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு இருபத்தி நான்கு பேரைக் கடலில் குளிப்பதற்கென்று அழைத்துச் சென்று சுட்டுக்கொல்ல முயற்சித்த போது கடலில்பாய்ந்து தப்பி வந்தவரே இத்தகவலைத்தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் தன்னுடன்மேலும் மூவர்கடலில்பாய்ந்து தப்பிக்க முயன்றதாகவும், ஆனால் தான் மட்டும் சிறு காயத்துடன் நீந்திக் கரைசேர்ந்ததாகவும், மற்ற மூவருக்கும் என்ன நேர்ந்ததெனத் தெரியாது எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை குளிப்பதற்கு என கொண்டுவரப்பட்ட ஏனையோர் சுடப்பட்டு இறந்துவிட்டதாகத்தான் பின்னர் அறிந்ததாகவும் தெரிவித்தார்.

## அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இரண்டாம் வருடமாணவனான பங்கராஜ் அன்ரனி யோசப்ராஜ் 22-8-90 அன்று அவரதுசொந்தஊரான ஊர்காவற்றுறையில் வைத்து சிறிலங்கா இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டார். இவருக்கு இவரது அறுபதாம் நினைவு நாளில் இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்கள் கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பணம் செய்துள்ளனர்.

## மாணவர் கருத்தரங்கு

வலிகாமம் பிரதேச விடுதலைப் புலிகள்மாணவர்இயக்க உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு நாளைவெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற இருக்கின்றது. இதில் அனைத்து விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்

---

தேவைக்கேற்ற

வகைகள் பற்றாக்குறையாகவும், ஸ்ரெப்ரோமைசின் போன்ற மருந்து வகைகள் முற்றாக தீர்ந்துவிட்ட நிலையிலும் உள்ளன. தற்போது கையிருப்பில் உள்ள சில மருந்துவகைகளும் முடிவடையும் நிலையில் உள்ளன.

தேவையான மருந்துப் பொருள்களை அனுப்பிவைக்கும்படி சுகாதார அமைச்சிடம் கோரிய போதிலும் அதிகம் பாவிக்கப்படாத மருந்து வகைகளையேசுகாதார அமைச்சு அனுப்பி வைத்துள்ளது. இதனால் நோயாளிகள் பலர் அவதியுறுகின்றனர். (க)

---

யு. எஸ்.

சாய இடு பொருட்களின் பற்றாக்குறையை உணர்ந்து இப்பகுதிக்கு தேவையான விவசாய இடுபொருள்களையும் சில விவசாய விதை பொருள்கள் போன்றவற்றையும் யு. எஸ். எயிட் நிறுவனம் கப்பல் மூலம் எடுத்துவர முயற்சிமேற்கொண்டிருந்தது. இம்முயற்சியை கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் முற்றாகத்தடுத்துள்ளது. (க)


வலி - வடக்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய

## கூட்டம்

காலம்: 14. 12. 1990ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 00 மணி

இடம்: யா / இராமநாதன் கல்லூரி மருதனாமடம், சுன்னாகம்.

இடம்பெயர்ந்த மக்கள் கிராம ரீதியாக, கூட்டுறவுச் சங்க கிளை ரீதியாக பிரதிநிதிப்படுத்தக் கூடிய வகையில் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சி. சிவமகாராசா,
தலைவர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.

தெல்லிப்பழை:
11-12-1990

(B. 1717)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.